## குழந்தைகளின் நடத்தை சார்ந்த பிரச்சனைகள் :

குழந்தைகளிடம் வெளிப்படும் பெரும்பாலான நடத்தைகள் பெற்றோரை, பாதுகாவலரை, பெரியோர்களை கவலை கொள்ள செய்வதாகவே அமைகின்றது. குழந்தைகள் சார்ந்த நடத்தை பிரச்சனைகள் லேசானது முதல் குறிப்பிட்ட வயதை எட்டும் வரையிலான நடத்தை பிரச்சனைகள் பெரும்பாலான குழந்தைகளுக்கு இருப்பது நாம் அறிந்ததே, ஆனால் சில நடத்தை பிரச்சனைகள் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாக உள்ளது. இவ்வாறான நடத்தை பிரச்சனைகள் குழந்தைகளிடமிருந்து அதிகமாகவோ அல்லது அடிக்கடி தொடர்ந்து வெளிப்படுவதாகவும் மற்றும் கல்வி பயிலும் இடத்தில் மற்றும் குடம்ப உறுப்பினர்களை பாதிக்கக்கூடிய அளவில் அமையும் பொழுது, நடத்தை சார்ந்த பிரச்சனைகளை கையாளும் வழிமுறைகளை பயன்படுத்த அறிவுறுத்தப் படுகின்றது.

சில வகையான நடத்தை பிரச்சனைகள் குடும்ப சூழ்நிலையின் காரணமாக உருவாகலாம், சில சந்தர்ப்பங்களில் அதாவது மிகவும் இறுக்கமான சூழ்நிலையின் காரணமாகவோ, நகரம் மாறும் சூழ்நிலையில், பெற்றோர் இடையே விவாகரத்து ஆகிய பிரச்சனை களினால் குழந்தைகளுக்கு நடத்தை பிரச்சனைகள் தோன்றலாம்.




## ïªâa FHª i j f Ë ‹ el¤ i j ãu¢r i d f Ë ‹ òŸË É tu§ f Ÿ :

- ïªâahÉš 1200 ÄšÈa ‹ k¡fŸbjh i fÆš 40%-44% FHª i j fŸ k‰W« ïs«gU t¤âd® M t®.
- 18 taâ‰F F i wthd 10% - 12% FHª i j fŸ el¤ i j ßâahd nfhshWfŸ, f‰wš F i wghL k‰W« t s®¢á ßâahd F i w¥gh£lhš ghâ¥g i lªJŸs d®.
- ICMR (Indian Council for Medical and Research) ‹ MuhŒ¢á KoÉš 12.8% FHª i j fŸ k‰W« ïs«gU t¤âd® k d «rh®ª j k‰W« el¤ i j rh®ª j nfhshWfË dhš mt â¥g£L bfh© oU¡» ‹ wd®.
- njáa msÉš MuhŒ¢á¡ fhf î«, gÆ‰á¡ fhf î« "FHª i j fŸ kdey« k‰W« Rfhjhu nr i t" J i w

## r_f k‰W« cz®î ßâahd ãu¢r i d f Ÿ cŸs ãŸ i s f i s ïd« fhQ jš :

- v¥bghGJ« k‰w FHª i j fnshL r © i lÆLjš.
- fšÉ nghâ¡F« MáÇaÇl«, rf kh z t®fËl« _®¡ f khf el ª Jbfh Ÿ S jš.
- mâf T¢r Rgh t «.
- mo¡ fo gj£lkhFjš.
- Äf mâf kd¢nrh®î l D« / tU¤j¤Jl D« fh z ¥gLjš
- mâf ão thj«.
- áy FHª i j fŸ Äf î« Mg¤jhd braš f Ëš <LgLjš, c jhu z khf j§fŸ j i yf i s Rt‰¿š nkhâ¡ bfhŸS jš, mšyJ k‰w Fhª i j f i s jŸË ÉLjš.

- அடிக்கடி கோபப்படுதல்.
- ஒழுக்கமின்மை



**சமூக மற்றும் உணர்வு ரீதியான நடத்தை பிரச்சினைகளின் காரணங்கள் :**

கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்களின் மூலம், குழந்தைகளின் சமூக மற்றும் நடத்தை பிரச்சனைகள் எதனால் ஏற்படுகின்றது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

- படிப்பில் தொடர்ச்சியான தோல்வி
- ஆசிரியரிடமிருந்து அதிக திட்டுவாங்குதல்
- மற்ற குழந்தைகளால் கேலி செய்யப்படுதல்
- பெற்றோர் ஒதுக்கப்படுதல்
- தன்னுடைய சுய மதிப்பை குறைத்து எடைப்போடுதல்
- தன்னம்பிக்கையற்று இருத்தல்
- ஆசிரியர் அல்லது பெற்றோர் தங்கள் குழந்தைகளின் செயல்திறனை மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டு பேசும் பொழுது குழந்தையின் சுயமதிப்பு பாதிக்கப்படலாம்.
- தோல்வியை எண்ணி அதிகம் கவலை கொள்வதால், குழந்தையால் முயற்சி எடுத்து வெற்றி பெறுவதில் சிக்கல் ஏற்படலாம்.

- பெற்றோர் அல்லது ஆசிரியரால் அதிக தண்டனைக்கு உட்படுத்தப்படுதல்.
- குடும்ப பிரச்சனைகள்
- பெற்றோரின் பிரிவு
- நிம்மதியற்ற குடம்பம்
- பெற்றோரிடையே ஏற்படும் சண்டைகளை காணும் பொழுது
- வீட்டில் அல்லது பள்ளியில் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படும் பொழுது
- வலுவான மருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் பக்க விளைவுகள்
- ஆசிரியரால் ஒதுக்கப்படும் பொழுது
- சிறு வயதில் போதை பழக்கத்திற்கு அடிமையாகுதல்
- கவனக்குறைவு
- பெற்றோர் ரீதியான மன உளச்சல் மற்றும் மனச்சோர்வு
- கொடிய நோயின் தாக்கம்



## நடத்தைசார்ந்த பிரச்சனைகளுடைய குழந்தைகளை கையாள்வதில் ஆசிரியரின் பங்கு :

நடத்தை சார்ந்த பிரச்சனைகளை கையாள்வதில் ஆசிரியர்களே முக்கியமான பங்கு வகிக்கின்றனர். ஏனேனில் குழந்தைகள் தங்கள் அதிக நேரத்தை கல்வி பயிலும் இடத்தில் செலவிடுகின்றனர். ஆசிரியரின் வழிநடத்துதலின் மூலம் கல்வி பயில்வதால் கல்வி வாயிலாக நல் ஒழுக்கம் மற்றும் நல்ல பண்புகளை வளர்த்து கொள்கின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக சில குழந்தைகள் நடத்தை சார்ந்த பிரச்சனைகளினால் அவதிக்குள்ளாகும் பொழுது அவர்களை நாம் சாதாரன பிள்ளைகளை கையாள்வது போல் கையாள முடியாமல் போகின்றது.

ஆசிரியர்கள் தங்கள் வகுப்பில் பயிலும் 50கும் மேற்;பபட்ட குாந்தைகளை கவனிப்பதற்கும், பாடத்தை நடத்தி முடிக்க வேண்டிய சூழ்நிலையில் காரணத்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி கவனத்தை செலுத்த முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு இருக்க நடத்தை சார்ந்த பிரச்சனைகளுடைய குாந்தைகளை கவனிப்பது அவ்வளவு சுலபம் அல்ல. அக்குழந்தைக்காக ஆசிரியர்கள் தனி கவனம் செலுத்தி பொறுமையோடும், உற்சாகத்துடனும், பாராட்டுகளின் மூலம் நல்வழிப்படுத்தலாம். இவ்வாறு நடத்தை சார்ந்த பிரச்சனைகளை கையாள ஆசிரியர்களுக்கான சில பணிகளை நாம் காணலாம்.



## 1). முழுமையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் :

ஒரு ஆசிரியர் தன் வகுப்பில் பயிலும் மாணவர்/மாணவி நடத்தை சார்ந்த பிரச்சனைகளோடு இருப்பதை கண்டறிந்தால் அக்குழந்தைக்கு போதுமான ஆதரவையும், அவர்களின் ஆர்வம், பொழுதுபோக்கு அம்சங்கள், அவர்களுடைய லட்சியங்களை அறிந்து கொண்டு அவர்களோடு வளமான உறவை வளர்த்து கொள்ளலாம். அதுமட்டுமின்றி அவர்கள் எடுக்கும் சிறு சிறு முயற்ச்சிகளை கூட நாம் பாராட்ட வேண்டும்.

## 2). நேர்மறையான உறவு :

ஒரு ஆசிரியரின் முதன்மையான பணியானது நடத்தை சார்ந்த பிரச்சனைகளுடைய குழந்தைகளிடம் நேர்மறையான உறவினை வளர்த்து கொள்ள வேண்டும். அக்குழந்தைகள் தவறு இழைக்கும் பொழுது கோபப்படாமல் பொறுமையுடன் கையாள வேண்டும். குழந்தையுடன் சிறிது நேரம் செலவிட தயக்கம் காட்டக்கூடாது. இதன் மூலம் குழந்தைகள் அவர்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றலை உணர்ந்து செயல்படுவர். ஆசிரியர் குழந்தைகளின் தவறுகளை மட்டும் உற்றுநோக்காமல் அவர்களின் பலத்தின் மீதும், அவர்களிடம் காணப்படும் நல்ல பண்புகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவதில் தங்கள் கவனத்தை செலுத்தலாம்.

### 3). யதார்த்தமான குறிக்கோள்களை நிலைநாட்டுவதில் உன்னிப்பாயிருங்கள்.

நடத்தை சார்ந்த பிரச்சனைகளையுடைய குழந்தைகள் மிகவும் கடினமான லட்சியங்களை அடையும் பொழுது அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் சுயமதிப்பு உயர்வு அடையும். ஆனால் அவர்கள் கற்றல் திறன் குறைபாட்டுடன் இருப்பதால் அவர்களுடைய திறனுக்கு ஏற்றவாறு சிறு இலக்குகளை அமைத்து தருதல் மிக முக்கியம். உதாரணமாக ஒரு குழந்தையால் நீண்ட விரிவான பதில்களை எழுத முடியாமல் இருந்தால் அவள் / அவன் மிகவும் தயக்கத்தோடு தேர்வினை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கும் ஆதலால் ஆசிரியர்கள் அக்குழந்தையின் இயலாமையினை அறிந்து தேர்வு பதில்களை முடிந்த அளவு சுருக்கி எழுதவும் அல்லது வாய்வழியாக பதில்களை சொல்லுமாறு உற்சாகப்படுத்தலாம். இதன் மூலம் குழந்தைகளின் தயக்கம் களைந்து தைரியத்துடன் சிறு சிறு காரியங்களை அனுகவும் வெற்றி பெறவும் தூண்டுதலாக அமையும்.

### 4.). வாய்ப்புகளை வழங்குதல் :

நடத்தை பிரச்சனைகளுடைய குழந்தைகளுக்கு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அக்குழந்தையின் விரோத குணங்கள் மற்றும் வலிய தாக்குதலில் செலவிடப்படும் ஆற்றலை ஆரோக்கியமான விதத்தில் வெளிபடுத்த அவர்களை விளையாட்டில், இசை பயில, உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடவும் மற்ற பொழுதுபோக்கு அம்சங்களில் அவர்களின் நேரத்தை செலவிட நீங்கள் ஊக்குவிக்கலாம்.

### 5.). தவறுகளை சுட்டிக்காட்டுதல் :

குழந்தைகள் வகுப்பு நடைபெறும் பொழுது எவ்வகையான நெறிமுறைகளை பின்பறற்ற வேண்டும் என்பதை விளக்கமாக

கூறுதல் மிக அவசியம். சில நேரங்களில் நடத்தை பிரச்சனைகளுடைய குழந்தைகள் வகுப்பு நடைபெறும் பொழுது ஒழுங்கற்ற முறையில் சில நடத்தைகளை வெள்பபடுத்தலாம். அவ்வாறு ஏற்படும் பொழுது ஆசிரியர் அக்குழந்தையை சந்தித்து அவர்களிடம் அச்செயலின் பாதிப்பை விளக்கமாக எடுத்து கூறலாம். அவ்வாறு எடுத்து கூறியும் ஒழுங்கற்ற நடத்தை குழந்தையிடமிருந்து தொடர்ந்து வெளிப்பட்டால், ஆசிரியல் தங்களுடைய மொத்த முயற்சிகளை எடுத்தும் எந்த பயனும் பெறவில்லை என்பதை அறிந்தால், குாந்தையை பள்ளி தலைமை விவரங்களை எடுத்துக்கூறி அவர்களின் பெற்றோர்களிடம் குழந்தையின் பிரச்சனையை விளக்கமாக ஆலோசித்து அவர்களை ஒரு நல்ல மருத்து வரிடமோ, உளவியலாளரிடமோ அழைத்துச் செல்லுமாறு வழிநடத்தலாம்.



## 6.). கல்வி கற்றலை சந்தோஷமாக்குங்கள் :

குழந்தைகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளை செய்து முடித்தபின், அவர்கள் விரும்பும் வேலைகளை செய்ய அல்லது அவர்களை மகிழ்வூட்டக்கூடிய கலை நிகழ்ச்சிகளிளோ, கணிபொறியிலோ தங்கள் நேரத்தை செலவிடவோ, அவர்களை ஊக்குவிக்கலாம். இதன்மூலம் அவர்கள் கல்வி பயில்வதில் ஆர்வம் காட்டவும் பள்றி ஆசிரியரின் வழிநடத்துதலின் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான செயலில் ஈடுபட ஏதுவாக் இருக்கும்.

### 7). குழுவாக செயல்பட ஊக்குவிக்கலாம் :

நடத்தை பிரச்சனையுடைய குழந்தைகள் பொதுவாக தனிமையை விரும்புவர், மற்ற குழந்தைகளோடு நேரம் செலவிடவோ அல்லது விடையாடவோ அவர்களுக்கு பிடிக்காது. இவ்வகையான குாந்தைகளை இனங்கண்டு அவர்களை குழுவாக செயல்படக்கூடிய வேலைகளில் ஈடுபடுத்தலாம். இவ்வாறு குழுவாக செயல்படும் பொழுது அக்குழந்தை நாம் ஒரு குழுவின் உறுப்பினர் என்பதை நினைவில் வைத்து செயல்பட உதவுகிறது.



### 8). தொடர்ச்சியான ஊக்குவித்தல் :

ஆசிரியர் சோர்ந்து போகாமல் தங்களால் முடிந்த அளவுக்கு குாந்தைகளை ஊக்குவித்தல் வேண்டும். குழந்தைகள் தங்களால் இதற்குமேல் சாதிக்க இயலாது என்ற எண்ணம் மேலோங்காமல், அவர்கள் மீண்டும் மீண்டும் முயற்சி செய்யவும், தோல்வியை கண்டு துவண்டு போகாமல் இருக்கவும் அவர்களை ஊக்கிவித்தல் வேண்டும்.

### 9). உற்றுநோக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல் :

ஆசிரியர் குழந்தையின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்வது மிக முக்கியம். உதாரணமாக நடத்தை பிரச்சனையுடைய குழந்தை உங்கள் வகுப்பில் பயில்வதாக வைத்து கொள்வோம்,

அப்பொழுது அக்குழந்தையிடம் நீங்கள் அதிக கவனமாகவும் அக்குழந்தையின் செயல்பாட்டினை உற்றுநோக்கி அக்குழந்தைக்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர். இதன்மூலம் அக்குழந்தை வகுப்பில் தனித்து இராமல் மற்றவரோடு இணைந்து செயல்பட ஆரம்பித்திருப்பதை நீங்கள் கண்டால் அக்குழந்தையின் மாற்றத்தைக்குறித்து பாராட்டவும் அவற்றை மதிப்பீடு செய்து தலைமை அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல் மிக அவசியம், ஏனென்றால் உங்கள் உழைப்பு மற்றும் குழந்தைகளிடம் செலவிட்ட நேரத்தை நீங்கள் வெற்றிகரமான முறையில் செலவழித்திருப்பதை பிள்ளைகளின் பெற்றோரும் மற்ற ஆசிரியர்கள் அறியவும் உபயோகமாக அமையும்.

### 10). இணைந்து செயல்படுதல் :

ஆசிரியர் மட்டும் தனித்து நின்று செயல்பட்டு குழந்தையிடம் மாற்றத்தை கொண்டுவர இயலாது, ஆசிரியர்கள் குாந்தைகளை சுற்றியுள்ள உறுப்பினர்களை சந்தித்து குழந்தையின் நடத்தைகளின் மாற்றங்களையும் அதன் காரணங்களையும் அறிந்து கொள்ளலாம். இதன்மூலம் குழந்தையின் பாதிப்பிற்கான காரணங்களை மட்டுமின்றி அவ்வகையான ஒழுங்கற்ற நடத்தைகளை எவ்வாறு மாற்ற முடியும் என்பதை நாம் தெள்ள தெளிவாக அறிந்து கொள்ளலாம். உதாரணமாக ஆசிரியர் தனது வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் பொழுது ஒரு மாணவன் மற்றவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக சண்டை போடுவதிலும் மற்ற குாந்தைகளை பார்த்து கத்தி திட்டுவது போன்ற ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடுவதை கண்டால் அம்மாணவனை சந்தித்து அவனது தவறை நாம் கோபப்படாமல் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆதுமட்டுமின்றி குழந்தையின் பெற்றோரை சந்தித்து பாதிக்கப்பட்ட குழந்தையின் ஒழுங்கற்ற ஆற்றலை பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களின் பயிற்சின் மூலம் அவ்வாற்றலை ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்த உதவுமாறு அறிவுரை கூறி வழிநடத்தலாம்.

## 11). ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானவர்கள் :

ஆசிரியர்கள் அனைத்து குழந்தைகளையும் ஒரே கண்ணோட்டத்தில் அணுகாமல், ஒவ்வொரு குழந்தையின் ஆற்றல் மற்றும் தனித்துவமான பண்புகளை அறிந்து அவர்களை வழிநடத்துவது சிறந்த செயலாகும். ஒவ்வொரு குழந்தையும் பலதரப்பட்ட குடும்ப பின்னனியில் இருந்து வருகின்றனர், பல குடும்ப பிரச்சனைகள் மத்தியில் அவர்கள் பள்ளி படிப்பை தொடரலாம், அவர்கள் உறவினரின் பாதுகாப்பில் வளரும் குழந்தையாக இருக்கலாம், பெற்றோரின் அரவணைப்பற்று இருக்கலாம் இவ்வகையான பல சமூக மற்றும் மனரிதியான பிரச்சனைகளை எதிர்கொண்டு வளர்கின்ற குழந்தைகளின் அணுகுமுறையும் நடத்தையும் வேறுபடலாம். அவர்களை சாதான குழந்தையை போன்று அணுகி அவர்களிடம் மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

## நடத்தை சார்ந்த பிரச்சனைகளுடைய குழந்தைகளை கையாள்வதில் பெற்றோரின் பங்கு :

குழந்தைகள் தங்களுடைய பெரும்பாலான நேரத்தை கல்வி பயில்வதில் செலவழித்தாலும், மற்ற நேரங்களில் பெற்றோருடன் இணைந்து நேரம் செலவிடுகின்றனர். ஆசிரியரை காட்டிலும் இருமடங்கு பொறுப்பும் அக்கறையும் பெற்றோருக்கு உண்டு. தங்கள் குழந்தைகள் எவ்வாறு படிக்கின்றனர், அவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக செல்கின்றார்களா, அவர்களின் நண்பர் வட்டம், அவர்களுடைய பழக்க வழக்கம், நடத்தை, சமுதாயத்தில் அவர்கள் அணுகு முறை, அவர்களிடம் உள்ள பிரச்சனைகள்,

திறமைகள் போன்ற அம்சங்களை ஆராய்வதில் பெற்றோர் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

பெற்றோர் தங்கள் தடத்தை சார்ந்த பிரச்சனைகளையுடைய குாந்தைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து சில வழிமுறைகளை காண்போம்.

- ✓ வீட்டில் குழந்தைகளுக்கென பிரத்யேக ஒழுங்குமுறைகளை பின்பற்ற வேண்டும்.
- ✓ ஒழுக்கமான நடத்தைகளை குழந்தைகள் வெள்பபடுத்தும் பொழுது அவர்களை பாராட்ட வேண்டும் மற்றும் குழந்தைகள் தங்கள் நடத்தையில் சில மாற்றங்களை கொண்டு வர முயற்சி எடுக்கும் பொழுது பெற்றோர் உறுதுணையோடு இருந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.
- ✓ குழந்தைகளை கட்டுக்குள் வைக்க சில சைகைகளை பயன்படுத்தலாம் அல்லது சில யுக்திகளை பயன்படுத்தலாம்.
- ✓ குழந்தைகள் தவறு இழைக்கும் பொழுது அவர்களுக்கு கொடுக்கப்படும் பரிசு பொருட்களை தர இயலாது என்பதை வெளிப்படுத்தலாம்.
- ✓ பொது இடங்களில் குழந்தைகள் செய்யும் ஒழுங்கற்ற செயல்பாடுகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
- ✓ குழந்தைகள் பள்ளியில் கொடுக்கப்பட்ட வீட்டுப்பாடங்களை முடித்தார்களா என்று தினமும் விசாரிக்க வேண்டும்.
- ✓ குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப வெளிப்படும் சில நடத்தை பிரச்சனைகளை பெற்றோர் பெரிதாக எண்ணி கவலை கொள்ள வேண்டாம். உதாரணமாக, பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப 2 வயது குழந்தைக்கு விளையாட்டு பொருட்களோடு தனிமையில் விளையாட இயலாது

அவ்வாறான நடத்தை இயற்கையான ஒன்று. இவ்வகையான ஒத்த நடத்தைகள் வயதிற்கு ஏற்றார் போல் மாறுபடும்.

- ✓ குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையே உரையாடல் மிக முக்கியமான அம்சமாகும், பெற்றோர் எவ்வளவு வேலையாக இருந்தாலும் சிறிது நேரம் / நிமிடங்கள் குழந்தைகளோடு செலவழித்து அவர்களின் அன்றாட பள்ளி / கல்லூரி வாழ்க்கை எவ்வாறு உள்ளது என்பதை பற்றி விசாரிக்கலாம். அவர்களோடு உரையாடும் பொழுது உங்களுடைய முழு கவனமும் அவர்களிடம் புதிய வேண்டும். ஏனெனில் உங்கள் கவனம் அவர்கள் மேல் இல்லை என்பதை எளிதாக அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களிடம் உள்ளது.

- ✓ பெற்றோர் குழந்தைகளுக்கு முன்னிலையில் சண்டையிடுதல் கூடாது. நீங்கள் உபயோகிக்கும் வார்த்தைகள் தவறாக இருப்பின் அவ்வார்த்தைகள் அவர்கள் மனதில் பதிந்துவிடலாம். சில நேரங்களில் குழந்தைகள் தவறான வார்த்தைகளை உபயோகித்தால் அவர்களிடம் அது தவறான செயல் என்பதை பொறுமையோடு புரியவைக்க முயலுங்கள்.

- ✓ அளவுக்கு அதிகமான ஈடுபாட்டுடன் குாந்தைகளை அணுகக்கூடாது. உதாரணமாக ஒரு குழந்தை மிக பயந்த சுபாவம் அல்லது ஏதாற்றுக்கார குாந்தையாக இருந்தால் அவர்களின் செயலை கண்டும் காணமால் இருப்பது தவறு. அவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களாக இருப்பின் அவர்களின் பயத்தை போக்கும் விதமாக பயிற்சிகள் மற்றும் தன்னம்பிக்கையூட்டும் செயலில் ஈடுபட வைப்பதன் மூலம் அவர்களின் பய உணர்வு சிறிது சிறிதாக குறையும்.

- ✓ அளவுக்கு அதிகமான பாதுகாப்பு குழந்தைகளை மிகவும் பாதிக்கும். உதாரணமாக நண்பர்களோடு சேர்ந்து விடைளயாட அனுமதி கேட்கும் பொழுது, சில விதிமுறைகளை கூறி அவர்களை விளையாட

அனுமதிக்கலாம். அவர்களிடம் அதிக கட்டுபாடுகள் விதிக்கும் பொழுது குழந்தைகள் மிக அதிக மன உளைச்சலுக்கு கட்டுபாடுகளை மீறவே நினைப்பார்கள். அதிக கட்டுபாடு அவர்களை தீய வழியில் இட்டு செல்லும்.

- ✓ குழந்தைகள் தங்கள் நண்பர்களோடு நேரம் செலவிடவும் சேர்ந்து விளையாடவும் அனுமதிக்கலாம். உங்கள் மேற்பார்வையில் அவர்கள் தங்கள் நேரத்தை செலவிட ஆலோசனை கூறலாம்.
- ✓ பெற்றோர் தங்கள் குழந்தைகளின் திறமையறிந்து அத்திறமைகளை மென்மேலும் வளர்த்து கொள்ளும்விதமாக அவர்களை சில பயிற்சி பட்டறைகளில் இணைக்கலாம். இதன் மூலம் அவர்கள் தங்கள் திறமைகளை மென்மேலும் வளர்த்துக் கொள்ளவும், அவர்கள் சிறந்து விளங்க உதவியாக அமையும்.
- ✓ குழந்தைகள் விடுமுறை நாட்களில் இசை பயிற்சி, நடனம், வரைபடம் வரைதல், நீச்சல் பயிற்சி, மற்றும் பல உபயோகமான பயிற்சியில் அவர்களை இணைத்து விடலாம். பயிற்சி அளிக்கப்படும் நிறுவனத்தின் பின்னணியை ஆராய்ந்த பின் குாந்தைகளை சேர்ப்பது நல்லது.
- ✓ வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை குழந்தையின் பள்ளி ஆசிரியரை சந்தித்து அவர்களின் செயல்பாடு எவ்வாறு உள்ளது என்பதை பற்றி ஆலோசிக்கலாம். ஆசிரியர் கூறும் ஆலோசனைகளை பின்பற்றுவதன் மூலம் குழந்தையிடம் மாற்றத்தை எளிதாக கொண்டு வர இயலும்.
- ✓ குடும்பத்தில் பிரச்சினைகள் எழும் சூழ்நிலையில் குழந்தைகள் எதிர்காலம் பாதிக்காத வண்ணம் அவர்களை நம்பகமான குடும்ப உறுப்பினரின் அல்லது குழந்தைகள் இல்லங்களில் அவர்களை சேர்க்கலாம்..
- ✓ பெற்றோர் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை குழந்தைகளின் மீது திணிக்கக் கூடாது.

✓ நடத்தை சார்ந்த பிரச்சினைகளையுடைய குாந்தைகளை கையாள்வதில் பெற்றோர் சகிப்புதன்மையுடன் இருத்தல் வேண்டும்.

**நடத்தை சார்ந்த பிரச்சினைகளை கையாள்வதில் பாதுகாவலர்கள் மற்றும் குழந்தைகள் இல்ல பொறுப்பாளர்களின் பங்கு :**

குழந்தைகள் இல்லம் என்பது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக நிறுவப்பட்டவை. குழந்தைகள் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் பெற்றோர் உறுதுணையோடு இருந்து வழிநடத்தக்கூடிய குடும்ப சூழ்நிலை அமையாத பொழுது, அக் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களை தற்காலிகமாகவோ அல்லது குறிப்பிட்ட வயது அடையும் வரை அவர்களை குழந்தைகள் இல்லத்தில் தங்கி கல்வி பயில அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு தங்கி கல்வி பயிலும் குழந்தைகளில் சிலர் நடத்தை சார்ந்த பிரச்சினையுடன் காணப்பட்டால் அவர்களை மிக கவனமுடன் கையாள்வது அவசியம். நடத்தை சார்ந்த பிரச்சினைகளை கையாள்வதில் இல்ல அலுவலர்களின் பணிகளை நாம் காண்போம்.




**1. இல்ல கண்காணிப்பாளரின் கடமையும் பொறுப்புகளும் :**

❖ வேற்றுமையின்றி அனைத்து குழந்தைகளுக்கும் நீண்ட நாள் மறுவாழ்விற்கான உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதிகள் குழந்தைகளுக்கு கிடைக்கின்றதா என்பதனை ஆய்வு செய்ய வேண்டும். இதில் ஏதேனும் குறைவு தென்பட்டால் அதற்கு தீர்வினை கண்டு சரிபடுத்த வேண்டும்.

❖ நடத்தை சார்ந்த பிரச்சினைகளோடு குழந்தைகள் இருப்பதை கண்டறிந்தால், அவர்களை மற்ற குழந்தைகளிடமிருந்து ஒதுக்காமல் அவர்கள் மற்ற குழந்தைகளிடமிருந்து ஒதுக்காமல் அவர்கள் மற்ற குழந்தைகளோடு சேர்ந்து விளையாடவும், கல்வி பயிலவும் ஊக்குவிப்பதன் மூலம் குழந்தைகளின் நடத்தை பிரச்சனைகள் அதிகரிக்காமல் பாதுகாக்கலாம்.

❖ இல்ல பணியாளர்களுக்கு நடத்தை சார்ந்த பிரச்சனைகளை குறித்த பயிற்சிகள், மற்றும் விழிப்புணர்வுகள் அளிப்பதன் மூலம் அவர்கள் நடத்தை பிரச்சனையுடைய குழந்தைகளை எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்வார்கள்.

❖ குழந்தைகள் இல்லத்தில் அன்றாட பயன்படுத்தும் பொருட்களை சேதப்படுத்தால் எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்ற நெறிமுறைகளை குழந்தைகளுக்கு வழங்கலாம். இதன் மூலம் அதன்நெறிமுறைகளின்படி குழந்தைகள் செயல்பட ஏதவாக அமையும்.

❖ நடத்தை பிரச்சினைகளையுடைய குழந்தைகளுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான குடிநீர், உணவு, போதிய உடை, இல்ல சுகாதாரம் மற்றும் உடல்நிலையில் போதிய கவனம் செலுத்த வேண்டும். அக்குழந்தைகள் கவனத்தை ஈரப்பதற்கே நடத்தை சார்ந்த பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றனர்.

❖ குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குடம்ப உறுப்பினர்களுடன் கூட்டம் நடத்தி குழ;நதைகளின் சிறந்த நலனில் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

**2. ஆற்றுப்படுத்துனரின் கடமையும் பொறுப்புகளும் :**

❖ நடத்தை சார்ந்த பிரச்சினைகளுடைய குாந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான ஆற்றுப்படுத்துதல் சேவைகளை வழங்குதல்.

❖ குழந்தைகளின் நடத்தையில் மாற்றங்களை கொண்டு வர அவர்களுக்கு உளவியல் சார்ந்த பயிற்சிகளை வழங்கலாம்.

- குழந்தைகளுக்கு தேவையான ரிலாக்சேஷன் தெரபி மற்றும் கண்டிஷனிங் தெரபி ஆகிய முறைகளை கொண்டு குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கலாம்.
- ஆற்றுபடுத்துதல் துறையில் சிறந்து விளங்கும் நபர்களின் உதவியோடு குழந்தைகளின் நடத்தை பிரச்சினைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்ற பயிற்சியையும், கையாளும் வழிமுறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.
- இல்லத்தில் உள்ள மற்ற மலுவலர்களின் துணையோடு குழந்தைகளின் நடத்தையில் மாற்றத்தையும் கொண்டு வரலாம்.
- குழந்தைகளின் நலனில் பாரட்சம் காட்டக்கூடாது.
- குழந்தைகள் ஏன் இவ்வாறான நடத்தை பிரச்சினைகளை வெளிப்படுத்துகிறார்கள் என்ற காரணத்தை இல்லத்தில் பணியாற்றும் மற்ற அலுவலர்களுக்கும் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். இதன் மூலம் மற்ற அலுவலர்கள் நடத்தை சார்ந்த பிரச்சினையுடைய குாந்தையை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை அறிந்து கொள்வார்கள்.
- இல்லத்தில் உள்ள அலுவலகர்கள் அனைவரும் குழந்தைகளின் நலனை முன்னிறுத்தி அனைத்து காரியங்களையும் செய்ய வேணடும்.
- அனைத்து குழந்தைகளிடமும் அன்பாக பழகவும், அவர்கள் செய்யும் தவறுகளை பொறுமையுன் கையாண்டு அத்தவறினை அவர்கள் மீண்டும் செய்யாதவாறு அவர்களுக்கு அறிவுரை வழுங்க வேண்டும்.
- குழந்தைகளின் பிரச்சினைகளை பொறுமையாக காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவர்கள் கூறுவது உண்மையாகவும் இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம்இ ஏதவாக இருந்தாலும் அவர்களின் முன்னிலையில் எதையும் வெளிப்படுத்த வேண்டாம். அவர்களிடம் “என்னால் முடிந்த உதவிகளை நான் செய்ய முயற்சிக்கிறேன், நீ நன்றாக படிக்க வேண்டும்” என்ற நேர்மறையான வார்த்தைகளைகூறி அவர்களைஉற்சாகபடுத்தலாம்.
- மிகவும் மூர்க்கமாக நடந்துகொள்ளும் குாந்தைகளை தாமதமின்றி உடனே அணுகி அவர்களை தனிப்பிரிவில் மாற்றி அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

❖ நீங்கள் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அளித்த ஆற்றுபடுத்துதல் சேவையின் அறிக்கைகளை ஆவணப்படுத்திட வேண்டும். இதன் மூலம் குழந்தைகளின் முன்னேற்றத்தை அளவிடவும் எத்தனை குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் மற்றும் வருடத்தில் எத்தனை குழந்தைகள் நடத்தை சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியலாம்.

**3. நன்னடத்தை அலுவலர் / குாந்தை நல அலுவலரின் கடமையும் பொறுப்புகளும் :**

- நன்னடத்தை அலுவலர் இல்லத்தில் உள்ள அனைத்து குழந்தைகளிடமும் உரையாட வேண்டும். அவ்வாறு உரையாடுவதன் மூலம் குழந்தைகளின் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான சேவைகளை வழங்க ஏதவாக அமையும்.
- குழந்தைகளின் பிரச்சினைகள் குடும்பத்தை சார்ந்து இருப்பின், நன்னடத்தை அலுவலர் குழந்தையின் பெற்றோரை சந்தித்து பேச வேண்டும். குழந்தையின் சூழ்நிலையை பெற்றோருக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- வாழ்க்கை திறன் பயிற்சியினை அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கலாம்.
- குழந்தைகளின் உரிமை, கல்வியின் முக்கியத்துவம், குழந்தைகள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகள், எதிர் கொள்ளும் வழிமுறைகள் ஆகியவற்றை குறித்து இல்ல குழந்தைகளுக்கு விழிப்புணர்வு அளித்தல் வேண்டும்.

**4. இல்ல பாதுகாவலரின் கடமையும் பொறுப்புகளும் :**

- நடத்தை சார்ந்த பிரச்சினையுடைய குாந்தையை அன்புடனும் பாசத்துடனும் கையாள வேண்டும்.
- இல்ல விதிமுறைகளை எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பது குறித்து குழந்தைகளக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.
- இல்லத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை எவ்வாறு பேணப்பட வேண்டும் மற்றும் அதன் முக்கியதுவத்தை எடுத்துரைக்க வேண்டும்.

- அன்றாட பணிகளை குழந்தைகள் சிறப்பான முறையில் செயல்படுத்த பயிற்சி அளிக்க வேண்டும்.
- இல்லத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிபடுத்த வேண்டும். ஏனெனில் நடத்தை சார்ந்த பிரச்சினைகளுடைய குழந்தைகள் எந்த நேரத்தில் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை யூகிக்க இயலாது எனவே எல்லா நேரங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**5. சமுதாயத்தின் பங்கு :**




- நடத்தை சார்ந்த பிரச்சினைகளுடைய குழந்தைகளை ஒதுக்க வேண்டாம்.
- அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல் மற்றும் உதவிகளை செய்ய வேண்டும்.
- குழந்தைகளை கோபப்படுத்தக் கூடாது.
- நடத்தை சார்ந்த பிரச்சினைகள் வருவதற்கான காரணங்களை அறிந்து கொள்வதன் மூலம் குழந்தைகளின் நடத்தையில் மாற்றத்தை கொண்டு வர இயலும்.

இப்புத்தகத்தின் மூலம் குழந்தைகளிடம் காணப்படும் நடத்தை சார்ந்த பிரச்சினைகளின் காரணங்கள், புள்ளி விவரங்கள் மற்றும் கையாளும் வழிமுறைகளை அறிந்து கொண்டிருப்பீர்கள். இவ்வழிமுறைகளை நீங்கள் பின்பற்றுவதன் மூலம் குழந்தையின் நடத்தை பிரச்சினையில் மாற்றத்தை கொண்டு வரலாம். பெரியவர்களாகிய நாம் குாந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிடுவதோடு கடமை முடிந்து விடாது. குழந்தைகள் எங்கு செல்கிறார்கள், பள்ளியில் எவ்வாறு படிக்கிறார்கள், அவர்களின் அன்றாட நிகழ்வினை கேட்டு அறிந்து சமுதாய பிரச்சினைகளை அவர்களோடு உரையாடலாம். இதன் மூலம் சமுதாய பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்பதை புரிந்து கொள்வார்கள்.

இக்கால சமுதாயத்தினர் மிக வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் செயல்படக்கூடியவர்கள், அவர்களின் வேகத்துக்கு ஈடாக நாமும் அவர்களை அன்பாக அணைத்து அன்பு செலுத்தி, கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிக்கவும் வேண்டும். குழந்தைகளின் முதல் வழிகாட்டி பெற்றோர் தான். பெற்றோர் குாந்தைகளை சிறு வயதில் இருந்து பேணிப் பாதுகாத்து அவர்களின் வயதிற்கு ஏற்ற வளர்ச்சிகளை அடைகிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். பெற்றோரின் அரவணைப்பில் இல்லாத குழந்தைகளின் பாதுகாவர்கள் தம் பாதுகாப்பில் இருக்கும் குாந்தைகளை பேணிப் பாதுகாத்து அவர்களை நல்வழிபடுத்துதல் வேண்டும். குறிப்பாக அவர்களின் வளர்ச்சியில் அல்லது நடத்தையில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தாததிக்காமல் குழந்தை நல மருத்துவரையோ, மனநல ஆலோசகரையோ சந்தித்து தீர்வு காணலாம்.

மன நலம் என்பது மனிதனுக்கு எல்லா வயதிலும் சீராக அமைதல் வேண்டும். மனரீதியான பிரச்சனைகளை கண்டு பயப்படவோ அல்லது ஒதுக்கவோ கூடாது. குழந்தைகளிடம் பொதுவாக காணப்படும் குணக்கோளாறுகள்



அல்லது மனக்கோளாறுகள் வளர்ந்தால் சரியாகி விடும் என்று தவறாக எண்ணி அவற்றை கவனிக்காமல் விடவேண்டாம். விரைந்து மனநல உதவி பெற்று குழந்தைகளின் மனநலத்தை காப்போம்.